


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஜுலை. 12, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 273 ❖ ரூ.10

### ஓபிஎஸ்ஐ நீக்கினார் ஈபிஎஸ், ஈபிஎஸ்ஐ நீக்கினார் ஓபிஎஸ்

# சடுகுடு

## ஒற்றைத் தலைமை விவகாரத்தில் திண்டுக்கல் சீனிவாசனுக்கு ஜாக்பாட் கறம்பக்குடி அருகே சசிகலா டென்ஷன்

சென்னை ஜுலை.12-

"அதிமுகவில் உயர்ந்த பதவிகளை வழங்கிய தொண்டர்களைத் தாக்கி, அவர்களுக்கு நல்ல வெகுமதியை ஓபிஎஸ் வழங்கியுள்ளார்" என்று அதிமுக இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க., அலுவலகத்தில் நடந்த மோதலில் காயமடைந்ததொண்டர்கள் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களை, பழனிசாமிசந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் பழனிசாமி நிருபர்களிடம்கூறியதாவது: அதிமுக பொதுக்குழு நடக்கும் போது, கட்சியின் தலைமை அலுவலகத்திற்குள் சமூக விரோதிகள் புகக்கூடும் என தகவல் வந்த உடன் ராயப்பேட்டை போலீஸ் மற்றும் சென்னை போலீஸ் கமிஷனரிடம் புகார் அளித்தோம். ஆனால், இன்று நடந்தது, எங்களுக்கு கிடைத்த தகவல் உண்மை என்பது நிரூபணம் ஆகி உள்ளது. கமிஷனர் போதிய பாதுகாப்பு அளித்ததாக தெரியவில்லை. பிரதான எதிர்க்கட்சியான அதிமுக மனு அளித்தும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. பன்னீர்செல்வம், அதிமுக தலைமைஅலுவலகத்திற்குள் அத்துமீறிநுழைந்ததுமட்டும் அல்லாமல், ரவுடிகளை அழைத்து கொண்டு நிர்வாகிகளை தாக்கியது கண்டனத்திற்குரியது.



### ஓபிஎஸ்–ன் பேட்டி

அதிமுக தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த ஓ.பன்னீர்செல்வம், "அதிமுக சட்ட விதிகளின்படி தொண்டர்கள் என்னை ஒருங்கிணைப்பாளராக தேர்வு செய்தனர். என்னை நீக்க எடப்பாடி பழனிசாமிக்கும், கே.பி.முனுசாமிக்கும் அதிகாரம் இல்லை. அதிமுக விதிகளுக்கு புறம்பாக தன்னிச்சையாக செயல்பட்ட எடப்பாடி பழனிசாமி மற்றும் கே.பி.முனுசாமிக்கு கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருவரையும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குவதாக அறிவிக்கிறேன். அதிமுக விதிகளின்படி தொண்டர்களுடன் இணைந்து நீதிமன்றத்திற்கு சென்று நீதியை பெறுவோம்" என்றார் ஓ.பன்னீர்செல்வம்.

தொண்டர்களை தாக்கியது மிகமிககெடூரமானது.திமுக உதவியுடன்பன்னீர்செல்வம் குண்டர்கள் அதிமுக தொண்டர்கள்மீதுதாக்குதல் நடத்தி உள்ளனர்.

எந்த ஒரு தலைவராவது தனது கட்சியினரை தாக்குவார்களா ? முதல்வர், துணை முதல்வர், ஒருங்கிணைப்பாளராக ஆக்கியதற்குபன்னீர்செல்வம் தகுந்த வெகுமதியை அளித்துள்ளார். நீங்கள் வளமோடு,அதிகாரத்தோடு இருந்ததற்கு காரணம் மாவட்ட செயலாளரும், நிர்வாகிகளும் தான். மனசாட்சி இல்லாத மிருகத்தனமான மனிதர்களுக்கு தான் இந்த எண்ணம் வரும். சுயநலவாதி என கூறலாம். பொதுக்குழுவுக்கு வருவார் என எதிர்பார்த்து இருக்கைகளை போட்டு வைத்தோம். ஆனால் வரவில்லை.

மீன்பாடி வண்டியில் கற்களை கொண்டு வந்த ரவுடிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கண்மூடிதனமாகதாக்குதல் நடத்தியுள்ளனர். கற்களை வீசியதைதடுக்காதபோலீசார் எங்களது நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத்தி உள்ளனர். போலீசாரும் ரவுடிகளோடு சேர்ந்து மாவட்ட செயலாளரை,நிர்வாகிகளை தாக்கியதுகொடுமையானது. ரவுடிகளை அழைத்து வந்து கட்சியினரை பன்னீர்செல்வம் தாக்கியது கண்டிக்கத்தக்கது. அதிமுக.,வில் உயர்ந்த பதவியை வகிந்த அவர் செய்தது மிகப்பெரிய துரோகம். ரவுடிகளை அழைத்து வந்து பன்னீர்செல்வம் தாக்குதல் நடத்தியது வேதனை அளிக்கிறது. 31 ஆண்டுகள் ஆட்சி செய்த கட்சியின் நிர்வாகிகளுக்கே இந்த நிலை தான் என்றால், சாமானியர்களுக்கு என்ன நிலை என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். தமிழகத்தில்சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்பது நிரூபணம் ஆகியுள்ளது.

துரோகிகளுடன் இணைந்து ஸ்டாலின் போட்ட சதி திட்டம் தான் இது என்பது நிரூபணம் ஆகியுள்ளது. பன்னீர்செல்வம், எந்த காலத்திலும் மக்களுக்கு நன்மைசெய்ததுகிடையாது. அப்பகுதி மக்களுக்கும் நன்மை செய்தது கிடையாது. சுயநலவாதி. வேண்டுமென்றே திட்டமிட்டுஆவணங்களை எடுத்து சென்றுள்ளார். போலீஸ் பாதுகாப்புடன் அதிமுக அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை அள்ளி சென்றனர். அதற்கு போலீஸ் பாதுகாப்பு எவ்வளவு கேவலம். யார் தவறு செய்தாலும், அவர்களுக்கு பாடம் புகட்டுவோம். திட்டமிட்டு திமுகவிற்கு வக்காலத்து வாங்கி பேசியதால் தான் பன்னீர்செல்வம் இந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

அதிமுக அலுவலகம் ஒன்றும் கார்பரேட் சொத்து அல்ல. அது தொண்டர்களின் சொத்து. எம்ஜிஆர் கொடுத்த சொத்து. எத்தனையோ தலைவர்கள்இருந்தபோதும் ஆவணங்களை எடுத்து சென்றனரா? அதிமுக தலைமை அலுவலகத்திற்கு வேண்டுமென்றே சீல் வைத்துள்ளனர். நீதிமன்றம் மூலம் அனுமதி பெற்று அதிமுக தலைமை அலுவலகம் புதுப்பொலிவுடன் திறக்கப்படும். இவ்வாறு பழனிசாமி கூறினார். இதற்கிடையே அ.தி.மு.க., பொருளாளராக இருந்த பன்னீர்செல்வம் அப்பதவியில் இருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டார். இதனையடுத்து பொருளாளராக திண்டுக்கல் சீனிவாசனை நியமித்து பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுதலை நாளிதழின் ஆசிரியராக பொறுப்பேற்று 60 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி சந்தித்தார். அருகில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு ஆகியோர் விடுதலை நாளிதழின் 10 ஆண்டுகளுக்கான சந்தாவை வீரமணியிடம் வழங்கினார்கள். உடன் அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜா, ஆர்.எஸ். பாரதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கேஎஸ். இளங்கோவன், திராவிடர் கழக துணைத் தலைவர் பூங்குன்றான், பொதுச் செயலாளர் அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.

### புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில்

## 6.5 மீட்டர் உயர வெண்கல தேசிய சின்னத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்

டெல்லி ஜுலை.12-

புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் மேற்கூரையில் நேற்று காலை 6.5 மீட்டர் உயரமுள்ள வெண்கலத்தில் உருவான தேசிய சின்னம் ஒன்றை பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார்.



புதிய நாடாளுமன்ற கட்டிடம், மத்திய விஸ்டா மறு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் டாடா நிறுவனம் சார்பில் கட்டப்பட்டு வருகிறது. இந்த புதிய கட்டிடம், 64 ஆயிரத்து 500 சதுர மீட்டர் பரப்பில் ரூ.971 கோடி செலவில் நில அதிர்வு ஏற்பட்டாலும், அதனை தாங்கும் வகையில் அதிநவீன வசதியுடன் அமைகிறது. இந்திய கலாசாரத்தின் பன்முக தன்மையைபிரதிபலிக்கும் இதன் கட்டுமானப் பணியில் 2 ஆயிரம் பேர் நேரடியாகவும், 9 ஆயிரம் பேர் மறைமுகம் ஆகவும் ஈடுபடுவார்கள்.

தற்போதுள்ள நாடாளுமன்றத்தில் மக்களவையில் 543 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 245 உறுப்பினர்களும் அமரும் வகையில் இருக்கை வசதிகள் உள்ளன. புதிய நாடாளுமன்ற கட்டிடம்,எதிர்காலத்தில் இரு அவைகளையும் விரிவாக்கம் செய்ய வசதியாக மக்களவையில் 888 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 384 உறுப்பினர்களும் அமரத்தக்க வகையில் கட்டப்படுகிறது.

புதிய கட்டிடத்தில், நாடாளுமன்ற கூட்டு கூட்டத்தில் 1,224 உறுப்பினர்கள் பங்கேற்க முடியும். தரைத்தளம், அதன் கீழே ஒரு அடித்தளம், முதல் தளம், இரண்டாவது தளம் என மொத்தம் 4 தளங்களை கொண்டிருக்கும். நாடாளுமன்ற கட்டிடத்தில் இந்திய ஜனநாயகத்தின் பெருமையை உலகிற்கு எடுத்து காட்டும் வகையில் பெரிய அரங்கம் ஒன்று அரசியல் சாசன அரங்கம் என்ற பெயரில் அமையும். நூலகம், கட்சி அலுவலகங்கள், பல்வேறு நிலைக்குழு அலுவலகங்கள், உணவு உண்ணும் அரங்குகள், வாகன நிறுத்துமிடங்கள் என அளவில்லா வசதிகளை கொண்டிருக்கும்.

இந்த புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் மேற்கூரையில் நேற்று காலை 6.5 மீட்டர் உயரமுள்ள வெண்கலத்தில் உருவான தேசிய சின்னம் ஒன்றை பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார். இந்த நிகழ்ச்சியில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மத்திய மந்திரி ஹர்தீப் சிங் புரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதன் பின்னர் புதிய நாடாளுமன்ற கட்டிட கட்டுமான பணியில் ஈடுபட்டு உள்ள பணியாளர்களுடன் சிறிது நேரம் பிரதமர் மோடி உரையாடினார்.

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் விஜய் மல்லையாவுக்கு 4 மாத சிறை தண்டனை விதித்து சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு

டெல்லி ஜுலை.12-

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தொழிலதிபர் விஜய் மல்லையாவுக்கு 4 மாத சிறை தண்டனை மற்றும்ரூ.2ஆயிரம்அபராத தொகை செலுத்தும்படி சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.



பொதுத்துறை வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் வாங்கி, அதனை திரும்ப செலுத்தாமல் வெளிநாட்டிற்கு தப்பி சென்ற தொழிலதிபர் விஜய் மல்லையா பணப்பரிவர்த்தனையில் ஈடுபட கூடாது என சுப்ரீம்கோர்ட்டு உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால் அதனை மீறி 40 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கான பரிவர்த்தனையை அவர் மேற்கொண்டார்.

இது தொடர்பான வழக்கில் அவர் குற்றவாளி என கடந்த 2017-ஆம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி மல்லையா தாக்கல் செய்த மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தது. அத்துடன் அவர் நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞா மூலமாகவோ ஆஜராக பலமுறைசுப்ரீம்கோர்ட்டு வாய்ப்பளித்தது. எனினும் அவா நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இந்த வழக்கில் மல்லையாவுக்கான தண்டனை விவரம் பற்றிய அறிவிப்பை கடந்த மார்ச் 10-ந்தேதி சுப்ரீம்கோர்ட்டு பின்னர் அறிவிக்கப்படும் என ஒத்திவைத்தது.

இந்நிலையில், அந்த வழக்கு நேற்று பட்டியலிடப்பட்டது. இதன்படி, இந்த வழக்கு சுப்ரீம்கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதனை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி யு.யு. லலித் தலைமையிலான அமர்வு விஜய் மல்லையாவுக்கான தண்டனை விவரம் பற்றி அறிவித்துள்ளது. அதில், 40 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கான பரிவர்த்தனையை தனது குடும்ப உறுப்பினர்களான வாரிசுகளுக்கு அவர் மேற்கொண்டார்.

நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்காமல் மறைத்து, நீதிமன்ற அவமதிப்புசெய்ததற்கான குற்றத்திற்காகதொழிலதிபர் விஜய் மல்லையாவுக்கு 4 மாத சிறை தண்டனையும் ரூ.2 ஆயிரம் அபராத தொகை செலுத்தும் படியும் உத்தரவிட்டு தீர்ப்பு அளித்துள்ளனர். இது தவிர, 4 வாரங்களுக்குள் 40 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான தொகையை வட்டியுடன் அவர் திருப்பி செலுத்தும் படியும் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. அதனை செய்ய தவறும் பட்சத்தில், அது அவரது சொத்துக்கள் முடக்கத்திற்கு வழிவகுக்கும் என்றும் தீர்ப்பில்தெரிவித்துள்ளது.

## "நிஜத்தை தொலைத்தவர்களை நம்பி ஒரு குதிரை கூட செல்லாது":சசிகலா

புதுக்கோட்டை ஜுலை.12-

அதிமுக இடைக்காக பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், ''நிஜத்தை தொலைத்தவர்களை நம்பி ஒரு குதிரை கூட செல்லாது'' என்று உருவகக் கதை ஒன்றை சொல்லி விமர்சனம் செய்துள்ளார் வி.கே. சசிகலா.



அதிமுகவில் தொண்டர்களின் விருப்பத்துக்கு மாறாக பணபலம், படைபலத்தைக் கொண்டு பதவியை பிடிக்க நினைப்போரை நிராகரிக்கும் காலம் வந்துவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் நேற்று நடைபெற்ற தஞ்சாவூர் மாவட்ட அமமுக நிர்வாகியின் திருமணத்தை நடத்தி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: ''வழக்கு நிலுவையில் இருக்கும்போது பொதுச் செயலாளர்தேர்வுகுறித்து கூட்டம் நடத்தியதே தவறானது. எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளரானதே கேள்விக்குறியாக இருக்கும்போது ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கியது எப்படி செல்லும்?

அதிமுகவின் நிரந்தர பொதுச் செயலாளர் ஜெயலலிதா இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பதற்கு கழக தொண்டர்கள் தகுந்த பதிலடியை கொடுப்பார்கள். தற்போது அதிமுகவில் நடந்ததைப் போன்று திமுகவில் தொண்டர்களுக்கு மாறாக நடந்த ஒரு சம்பவத்தினால்தான் எம்ஜிஆர் தனிக்கட்சியை தொடங்கினார். அதுமட்டுமின்றி தொண்டர்களால்தான் பொதுச் செயலாளரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முறை கொண்டுவரப்பட்டது. தற்போது அந்த முறை பின்பற்றப்படவில்லை.

'அதிமுக அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டிருப்பதை அதிமுகதொண்டர்களும் விரும்பவில்லை. அதிமுகவுக்கு வாக்களித்த பொதுமக்களும் விரும்பவில்லை.

என்னை நாடி ஓ.பன்னீர்செல்வம் வந்தால் அதைப் பற்றி காலச் சூழ்நிலைக்கு ஏற்பதான் முடிவு எடுக்க முடியும். ஒட்டுமொத்த தொண்டர்களின் குரல்தான் இறுதியானது. அதுதான் வெற்றி பெறும். ஜெயலலிதா காலத்தில் நானும் பல பொதுக்குழுக்களுக்கு சென்றிருக்கிறேன். கட்சியின் வரவு செலவு அறிக்கையை பொருளாளர்தான் வாசிக்க முடியும். அப்படி இருக்கும்போது தற்போது வேறொருவர் வாசித்ததை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?.

கட்சித் தொண்டர்களும், பொதுமக்களும் என்னைத்தான் ஆதரிக்கிறார்கள். நான் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது உணர்ந்திருக்கிறேன். நான்இல்லாதசமயத்தில், மனஸ்தாபத்தினால் அதிமுகவில்சிலர் பிரிந்து இருந்திருக்கலாம். அவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரே அதிமுகவை உருவாக்கி வெற்றியை பெறுவோம். தமிழகத்தில் ஆட்சியை அமைப்போம்" என்றார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,689 | Rs.5,091 |

## வரலாற்றில் இன்று

1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

## ஆவுடையார்கோவில் அருகே ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக விழா

ஆவுடையார்கோவில் ஜூலை.12-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே தச்சமல்லி கிராமத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ விநாயகமூர்த்தி, ஸ்ரீ கருப்பர் சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஆலய கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்த பின்பு சிறப்பு அன்னதானமும் நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் அன்னதானத்தில் கலந்து கொண்டு சென்றனர்.



ஆவுடையார்கோவில் ஒன்றியத்துக்கு உட்பட்ட தச்சமல்லி கிராமத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக விழாவிற்காக கடந்த மூன்று நாட்களாக யாக சாலை வளர்க்கப்பட்டு புனித நீரை சிவாச்சாரியார் தலையில் சுமந்து கோவிலை வலம் வந்து கோபுர கலசத்திற்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் சுற்று வட்டார கிராம மக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.




## அறந்தாங்கி அருகே ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா

அறந்தாங்கி ஜூலை.12-

அறந்தாங்கி அருகே கே.பள்ளத்திவயல் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகாவிற்கு உட்பட்ட கே.பள்ளத்திவயல் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் புனரமைப்பு பணிகள் முடிவுற்று, அப்பகுதி கிராமத்தார்களால் கும்பாபிஷேகம் செய்வதென முடிவு செய்யப்பட்டது. இதனையடுத்து ஞாயிற்றுக்கிழமை முதல் காலயாகபூஜை தொடங்கி நடைபெற்றது. விழாவின் முக்கிய நாளான நேற்று இரண்டாம் கால யாகபூஜை முடிவுற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம் புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.

கடம் புறப்பாடானது கோயிலை வலம் வந்து பின்பு கோபுர கலசத்தை அடைந்தது. அதனைத் தொடர்ந்து ஆறுமுகம் சுவாமி தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை காண அப்பகுதியை சுற்றியுள்ள ஆன்மீக மெய்யன்பர்கள் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெற்றுச் சென்றனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆவுடையார் கோயில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## நெல்லை அருகே சாலையோர பள்ளத்தில் கார் கவிழ்ந்த விபத்தில் ஓட்டல் உரிமையாளர் பலி



நெல்லை ஜூலை.12-

அம்பை அருகே சாலையோர பள்ளத்தில் கார் கவிழ்ந்த விபத்தில் ஓட்டல் உரிமையாளர் உயிரிழந்தார்.

அம்பையில் பாரத் ஸ்டேட் பேங்க் எதிரில் ஹோட்டல் நடத்தி வருபவர் பீர்முகம்மது ஹக்கீம்(35). இவர் பக்ரீத் தினத்தை முன்னிட்டு தனது நண்பர்கள் மற்றும் சகோதரர்கள் சிவா(29), கோபி (24) மற்றும் ராஜேஷ் (28) ஆகியோர் வந்த காரை சிவா ஓட்டிவந்துள்ளார். அப்போது கார் அதிவேகமாக வந்ததாக கூறப்படுகிறது. இதில் கட்டுப்பாட்டை இழந்ததால் கார் சாலையோரத்தில் இருந்த பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த பீர்முகம்மது ஹக்கீம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தகவல் அறிந்த அம்பை காவல்துறையினர் சிவா,கோபி, ராஜேஷ் மூவரையும் மீட்டு சிகிச்சைக்காக அம்பை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### விளையாட்டு வீரர்களுக்கு ரொக்க விருதுகள், ஓய்வூதியம் ஆகியவற்றின்

## திருத்தப்பட்ட திட்டங்களை மத்திய மந்திரி அனுராக் தாக்கூர் தொடங்கி வைத்தார்

டெல்லி ஜூலை.12-

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை மந்திரி அனுராக் சிங் தாக்கூர், விளையாட்டு வீரர்களுக்கான திருத்தப்பட்ட ரொக்க விருதுகள், தேசிய நலன் மற்றும் ஓய்வூதியம், விளையாட்டுத் துறையின் திட்டங்களுக்கான வலைதளம், தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதி இணையதளம் ஆகியவற்றை டெல்லியில் தொடங்கி வைத்தார்.



சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கும் திட்டம், விளையாட்டு வீரர்களுக்கான பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் தேசிய நலன் போன்ற விளையாட்டு வீரர்களுக்கு ரொக்க விருது வழங்கும் திட்டத்தில் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் பல முக்கிய திருத்தங்களை கொண்டு வந்துள்ளதாக அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டங்களை மிகவும் எளிதில் அணுகுவதற்கு உகந்ததாகவும், வெளிப்படை யானதாகவும் மாற்றும் நோக்கத்துடன் விளையாட்டுத் துறை இந்தத் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலமும், அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான இடைவெளி குறைப்பதன் மூலமும், அமைப்பு மற்றும் வசதிகள், பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் மற்றும் குறைந்தபட்ச அரசு மற்றும் அதிகபட்ச ஆளுகையில் பிரதமரின் பார்வையை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் டிஜிட்டல் இந்தியாவை நோக்கிய மற்றொரு படியாக இந்த வளர்ச்சியை மத்திய மந்திரி பாராட்டினார். இந்த திருத்தப்பட்ட திட்டங்கள், சாதனை நேரத்தில் விளையாட்டு வீரர்களுக்கு பலன்களை வழங்க அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை வழங்கும் என்று மந்திரி விளக்கினார். இப்போது, எந்தவொரு தனிப்பட்ட விளையாட்டுவீரரும் அவரவர் தகுதிக்கு ஏற்ப மூன்று திட்டங்களுக்கும் நேரடியாக விண்ணப்பிக்கலாம் என்று அனுராக் தாக்கூர் எடுத்துரைத்தார்.

## புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவனுக்கு பாராட்டு

புதுக்கோட்டை ஜூலை.12-

உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறைசார்பாக, மண்டல அளவிலான பேச்சுப்போட்டி நடைபெற்றது. இப்பேச்சுப்போட்டியில் 6 மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர்.




திருச்சி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பேச்சுப்போட்டியில் மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவன் எஸ். அஸ்வின் அண்ணாமலை மண்டல அளவில் இரண்டாம் பரிசு பெற்று சாதனை படைத்துள்ளார்.

சாதனை படைத்த மாணவன் எஸ்.அஸ்வின் அண்ணாமலையை மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபாரதன், பள்ளி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும்பாராட்டினர்.

### மதுரை அருகே 76-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு

## 12-ஆம் வகுப்பு மாணவர் கட்டைக்காலில் ஆடியபடி டியூப் லைட்டுகளை உடைத்து உலக சாதனை



மதுரை ஜூலை.12-

76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 5 நிமிடத்தில் கட்டைக்காலில் ஆடியபடி 76 டியூப் லைட்டுகளை உடைத்து உலக சாதனை புரிந்த மாணவன்.

மதுரை மாவட்டம், வாகைக்குளம், மஞ்சமலை நகர் பகுதியை சேர்ந்த குமரேசன் என்ற 12-ஆம் வகுப்பு மாணவர் சிறு வயதில் இருந்தே நாட்டுப்புற கலைகள் மீதான ஆர்வத்தால் கட்டைக்கால் ஆட்டத்தில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறார்.

இந்நிலையில் நாட்டுப்புறக் கலைகளை பாதுகாக்கும் வகையிலும், நாட்டின் 76-வது சுதந்திர தினத்தை போற்றும் வகையிலும் மதுரை, பூதக்குடி பகுதியில் மாணவர் குமரேசன் நேற்று கட்டைக்கால் ஆட்டம் ஆடியபடி உடலில் 76-டியூப் லைட்டுகளை உடைத்து உலக சாதனை முயற்சியில் ஈடுபட்டார். ஏற்கனவே 3 உலக சாதனைகள் புரிந்த குமரேசன் தொடர்ச்சியாக 5 நிமிடத்தில் 76-டியூப் லைட்டுகளை உடைத்த சாதனை நிகழ்வுகளை ஏராளமான பொதுமக்கள் கைதட்டி உற்ச்சாக மூட்டினர்.

இதனை தொடர்ந்து உலக சாதனை படைத்ததற்காக பீனிக்ஸ் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் சார்பில் சான்றிதழ் வழங்கி பாராட்டினர். 76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இது போன்ற சாதனை முயற்சியில் மாணவர் ஈடுபட்டதாகவும், சாதனை புரிந்த நாட்டுப்புற கலைஞருக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் சாதனை புத்தக நிறுவனர் தெரிவித்தார்.

## ஆலங்குடி அருகே முத்து மாரியம்மன் கோவில் பூச்சொரிதல் விழா

ஆலங்குடி ஜூலை.12-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே உள்ள கீரமங்கலம் முத்து மாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு பூச்சொரிதல் விழா உற்சாகமாக நடைபெற்றது. தலையில் பூ தட்டுக்களை சுமந்து சென்ற நூற்றுக்கணக்கான பெண்கள் அம்மனுக்கு பூக்களை காணிக்கையாக்கி வழிபாடு செய்தனர்.

கீரமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் திருவிழா வரும் ஞாயிறு அன்று காப்புக்கட்டுதலோடு தொடங்க உள்ளது. இதன் முன்னோட்டமாக அம்மனுக்கு பூச்சொரிதல் விழா நடைபெற்றது.



ஊரின் பல்வேறு பகுதிகளில் இருந்து, அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு பூக்களை தலையில் சுமந்தவாறு ஊர்வலமாக கோவிலுக்கு சென்று அம்மனுக்கு பூக்களை காணிக்கையாக செலுத்தினர்.

ஒவ்வொரு பகுதி மக்களும் தங்கள் கரை வாரியாக வெடி வாணவேடிக்கைகளை வெடித்தவாரே, மேளதாளங்களுடன் ஊர்வலமாக சென்ற காட்சி காண்போரை பரவசமூட்டும் வகையில் இருந்தது.

வரும் ஞாயிறன்று காப்புக்கட்டுதலோடு தொடங்கும் திருவிழா, தேரோட்டம், மஞ்சள் விளையாட்டு என இரண்டு வாரங்களுக்கு நடைபெற இருப்பதால் கீரமங்கலம் பேரூராட்சி முழுவதும் திருவிழா கோலம் காணத் தொடங்கியுள்ளது.

## கோவில் நுழைவாயிலில் நித்தியானந்தாவுக்கு 18 அடி சிலை வைத்து கும்பாபிஷேகம் : எங்கு தெரியுமா ?

புதுச்சேரி ஜூலை.12-

கோவிலின் நுழைவு வாயிலில் 18 அடி உயரத்தில் நித்தியானந்தா உருவம் கொண்ட பிரம்மாண்ட சிலை காணப்பட்டது.

புதுச்சேரி மாநிலம், குருமாம்பேட் அருகே உள்ள பெரம்பையில் நித்தியானந்தாவின் சீடரான பாலசுப்பிரமணியம் என்பவர் மலேசிய முருகன் கோவில் போல் இங்கு ஒரு கோவிலைக் கட்டி வந்தார். இந்த கோவிலில் 27 அடியில் முருகன் சிலை பிரமாண்டமாக கட்டி முடிக்கப்பட்டு ஸ்ரீ பத்துமலை முருகன் ஆலயம் என பெயரிடப்பட்டு நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.



இதே போன்று கோவிலின் நுழைவு வாயிலில் 18 அடி உயரத்தில் நித்தியானந்தா உருவம் கொண்ட பிரம்மாண்ட சிலை காணப்பட்டது. இந்த சிலைக்கும் நேற்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இந்த சிலையை பார்த்ததும் போலீஸ் அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஏற்கனவே நித்யானந்தா சிவன் போல் வேடம் அணிந்து கையில் சூலத்துடன் தோன்றிய காட்சியைப் போல் இந்த சிலை இருந்தது. இதுகுறித்து கோவில் கும்பாபிஷேகம் செய்த சிவாச்சாரியார்களிடம் கேட்ட பொழுது இது சிவனின் மற்றொரு அவதாரமான கால பைரவர். மேலும், ஸ்தபதி சிலையை முறையாக வடிவமைக்காததால் இப்படி உள்ளது என்று கூறினார்.

பின்னர், கோவில் நிர்வாகி பாலசுப்பிரமணியன் அறைக்கு சென்று பார்த்த போது. அவர் அறை முழுவதும் நித்தியானந்தா அவருக்கு ஆசிவழங்குவதும், நித்தியானந்தா புகைப்படத்தை ஓவியமாக தீட்டி வைத்திருப்பதும் போன்ற புகைப்படங்கள் இருந்தது. மேலும், ஏற்கனவே நித்தியானந்தா படங்களை வைத்து அவர் பூஜித்து வந்ததும் தெரியவந்தது. பாதுகாப்பு பணிக்கு வந்த ஆரோவில் போலீசார் நித்தியானந்தா சிலையை ஆச்சரியத்துடன் பார்த்தனர். பக்தர்களும் அந்த சிலையின் முன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர். நித்தியானந்தா சீடர் முருகன் கோயில் கட்டி அங்கு 18 அடியில் நித்தியானந்தா சிலையை நிறுவி கும்பாபிஷேகம் செய்த நிகழ்வு அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# குத்தாலம் அருகே தேரிழந்தூரில் இஷா அத்துல் இஸ்லாம் சங்கம் துவக்க விழா



குத்தாலம், ஜூலை.12:
மயிலாடுதுறை மாவட்டம்,குத்தாலம் அருகே தேரிழந்தூரில் இஷா அத்துல் இஸ்லாம் சங்கம் துவக்க விழா நடைபெற்றது. இந்த சங்கமானது 100-ஆண்டுகள் பழமையானது. பக்ரீத் பண்டிகை முடிவடைந்த நிலையில் ஜமாத்தார்களும், அப்பகுதி இளைஞர்களும் ஒன்றிணைந்து செயல்படாமல் இருந்த சங்கத்தை மீண்டும் ஊரின் வளர்ச்சியை உன்னது நோக்கம் என்ற எண்ணத்தோடு மீண்டும் துவங்கின.

இதில் அப்பகுதி மக்களின் திறன்மேம்பாட்டு பயிற்சி, மருத்துவ முகாம், உடல் நலம், கல்வி வேலை வாய்ப்பு,தொழில் முனைவோருக்கான அறிவுரைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு,மது மற்றும் போதை மறுவாழ்வு மையம்,இரத்ததான முகாம், ஆம்புலன்ஸ் சேவை என தேரிழந்தூரில் உள்ள அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்த சங்கம் நேற்று துவங்கப்பட்டு அதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தேரிழந்தூர் முழுவதும் மரக்கன்றுகள் நடுவதற்கான தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஒரு பகுதியாக நேற்று தேரிழந்தூர் ஜாமியா மஸ்ஜித் பள்ளிவாசல் வளாகத்தில் ஜமாத்தர்களும், இளைஞர்களும் ஊர் பொதுமக்களும் சேர்ந்து மரக்கன்றுகளை நட்டனர்.

# தண்டலம் சங்கரா கிராமப்புறம் மருத்துவ மையத்தில் இலவச மருத்துவ முகாம்





ஊத்துக்கோட்டை, ஜூலை12-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், தண்டலம் பஜார் வீதியில் பெரியபாளையம்-ஊத்துக்கோட்டை நெடுஞ்சாலையில் சங்கரா கிராமப்புற மருத்துவ மையம் இயங்கி வருகிறது.கடந்த ஆண்டு இந்த மையத்தை தமிழக கவர்னர் திறந்து வைத்தார்.ஓர் ஆண்டு நிறைவு பெற்றது.

எனவே, இந்த மருத்துவ மையத்தில் நேற்று காலை முதல் மதியம் வரையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதனை ஊராட்சி மன்ற தலைவர் புவனேஸ்வரி ரவி துவக்கி வைத்து பார்வையிட்டார். எனவே, அவருக்கு மருத்துவ மையத்தின் சார்பாக சிஇஓ விஜயலட்சுமி சால்வை அணிவித்து கௌரவித்தார். இதில், டாக்டர்கள் எழிலரசி, துளசிலட்சுமி,புஷ்பலதா ஜினே ஆகியோர் தலைமையில் வந்திருந்த மருத்துவ குழுவினர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

### கொரோனா ஊரடங்கு காலத்தில் நிறுத்தப்பட்ட

# மயிலாடுதுறை – விழுப்புரம் ரயில் சேவை, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று காலை முதல் மீண்டும் துவங்கியது



**மயிலாடுதுறை , ஜூலை12–**
மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ரயில்வே சந்திப்பில் இருந்து, கொரனா காலத்தில் விழுப்புரம் ,திருவாரூர் ,திருநெல்வேலி ஆகிய ஊர்களுக்கு பாசஞ்சர் ரயில் சேவை இயக்கப்பட்டு வந்தது.

கொரோனா ஊரடங்கு காரணமாக இந்த ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. மீண்டும் ரயில் போக்குவரத்து துவங்கியதில் இருந்து, நிறுத்தப்பட்ட ரயில்களை இயக்க வேண்டும் என்று பொதுமக்கள், ரயில்வே பயணிகள் சங்கம் ஆகியோர் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து பேசஞ்சர் ரயில்கள் சிறப்பு கட்டண எக்ஸ்பிரஸ் ரயிலாக படிப்படியாக துவக்கப்பட்டு வருகின்றது. அதன்படி மயிலாடுதுறையில் இருந்து கொரனா காலத்தில் நிறுத்தப்பட்ட விழுப்புரம் பாசஞ்சர் ரயில், சிறப்பு எக்ஸ்பிரஸ் ரயிலாக இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன் சேவையை மீண்டும் துவங்கியது.

நேற்று காலை ஆறு மணிக்கு புறப்பட்டது. காலை ஆறு மணிக்கு புறப்படும் இந்த ரயில் காலை 9 மணி 5 நிமிடத்திற்கு விழுப்புரம் சென்றடைகிறது இதற்கு கட்டணமாக அறுபது ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் நாள் என்பதால் பயணிகள் கூட்டம் சற்று குறைவாக காணப்பட்டது. இதுபோல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்ட மயிலாடுதுறை திருநெல்வேலி பாசஞ்சர் ரயில் இன்று காலை 11:35 மணிக்கு திண்டுக்கல் சிறப்பு விரைவு ரயில் ஆக இயக்கப்படுகிறது. இதுபோல் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூருக்கு மாலை 6.15 மணிக்கு இயக்கப்படுகிறது. திண்டுக்கல் வரை இயக்கும் ரயிலை, மீண்டும் திருநெல்வேலி வரை இயக்க வேண்டும் என்று ரயில் பயணிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பெரியபாளையம் ஆடி திருவிழாவுக்கு வரும் பக்தர்களுக்கு

# அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும் என திருவள்ளூர் மாவட்ட உதவி இயக்குனர் கூறினார்



ஊத்துக்கோட்டை, ஜூலை12-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,பெரிய பாளையத்தில் புகழ்பெற்ற பவானி அம்மன் திருக்கோவில் ஒன்று உள்ளது.இக்கோவிலுக்கு ஆடி மாதம் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இருந்து 15 வாரங்கள் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் லட்சக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து தங்கி இருந்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தி விட்டு செல்வர்.

இவ்வாறு சென்னை, காஞ்சிபுரம்,திருவள்ளூர் மாவட்டங்கள் மற்றும் ஆந்திர மாநிலம்,பாண்டிச்சேரி மற்றும் வெளிநாடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து இக்கோவிலுக்கு வந்து செல்லும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர்,தங்கும் வசதி,போக்குவரத்து வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை எல்லாபுரம் ஒன்றிய குழு சார்பில் எவ்வாறு செய்து தருவது என்ற ஆலோசனை கூட்டம் பெரியபாளையத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, எல்லாபுரம் ஒன்றிய குழுதலைவர் வடமதுரை கே.ரமேஷ் தலைமை தாங்கினார். ஒன்றிய துணைப்பெருந்தலைவர் வக்கீல் சுரேஷ்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாந்தி, ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில்,சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மாவட்ட உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) ரூபேஷ் குமார் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:- ஆடித்திருவிழாவிற்கு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தங்கும் வசதி,போக்குவரத்து வசதி உள்ளிட்டவைகளை சிறப்பாக செய்து தர வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. எனவே,அப்பணியை சிறப்பாக செய்வோம் என்று கூறினார். இக்கூட்டத்தில், ஒன்றிய குழு உறுப்பினர்கள், கோவில் சார்பில் அறங்காவலர் லோகமித்ரா,செயல் அலுவலர் பிரகாஷ்,மேலாளர் வெங்கட் மற்றும் சுகாதாரத்துறை, காவல்துறை,மின்துறை, போக்குவரத்து துறை, நெடுஞ்சாலை துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகளும், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ உலக மக்கள் தொகை தினத்தையொட்டி இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து தொடக்கி வைத்தார்.



▶ திருவள்ளூர் அருகே கருப்பு தங்கம் முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்தநாள் முன்னிட்டு கடம்பத்தூர்( கி) வட்டாரத் தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் மணவாள நகர் யூனிட்டி விளையாட்டு குழு சார்பில் நடைபெற்ற மாபெரும் ஐவர் கால்பந்து போட்டியில் மணவாள நகர் அடுத்த கால்பந்து போட்டியில் சிறந்து கிராமமாக விளங்கும் மேல் நல்லாத்தூர் நீல நிற கால்பந்து குழு முதல் பரிசு ஜி.கே வாசன் நாடாளுமன்ற உறுப்பினர் தலைவர் தமிழ் மாநில காங்கிரஸ் அவர்களின் முன்னிலையில் முதல் பரிசு மேல் நல்லாத்தூர் நீல நிற கால் பந்து குழு அவர்களின் கையில் பெற்ற பொழுது



▶ முதல் இந்திய சுதந்திர போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் 265வது குருபூஜையை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு செய்யாறு சட்டமன்ற தொகுதி சார்பாக செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. உடன் வெம்பாக்கம் ஒன்றிய குழு தலைவர் மாமண்டூர் டி.ராஜி, அனகாவூர் ஒன்றிய குழு தலைவர் திலகவதி ராஜ்குமார், செய்யாறு நகர கழக செயலாளர் விசுவநாதன், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சங்கர், வெம்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் சீனிவாசன், அனகாவூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் திராவிட முருகன், அனக்காவூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ரவிக்குமார், செய்யாறு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஞானவேல் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



▶ சென்னை மெரினாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்துக்கு எடப்பாடி பழனிச்சாமி மரியாதை செலுத்தினார் . அதிமுக இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்ட பின் ஜெயலலிதா நினைவிடத்திற்கு பழனிச்சாமி மரியாதை செலுத்தினார். தமிழ்மகன் உசேன், கே.பி.முனுசாமி , ஜெயக்குமார், தங்கமணி, வேலுமணி, உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினார்கள்



▶ சென்னை வானகரத்தில் நடைபெற்ற அதிமுக பொதுக்குழுவிற்கு திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகம் செய்யாறு வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் மகேந்திரன்,மாவட்ட இணை செயலாளர் விமலா மகேந்திரன் ஆகியோர்களின் தலைமையில் பேரறிஞர் அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் வேடம் அணிந்து கொண்டு அதிமுக வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் வானகரத்தில் பொதுக்குழு கூட்டத்தில் வாயிலில் வரவேற்பு அளித்தனர்.



▶ மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு பந்தகால் நடும் நிகழ்ச்சி



ஊத்துக்கோட்டை, ஜூலை12-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் அருணகிரிநாதர் பாடல் பெற்ற சிறப்புமிக்க பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.எனவே, இக்கோவிலை புதுப்பித்து ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி கும்பாபிஷேகம் செய்ய இந்து சமய அறநிலை துறையினர் சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று கோவிலில் பந்த கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு கோயிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

இதில், கோவிலின் தலைமை குருக்கள் ஆனந்தன் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் ஓத பந்தகால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்,ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சி ராணி ராஜா,ஒன்றிய கவுன்சிலர் சந்துரு, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் பகலவன்,ரமேஷ், மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அதிமுக பொதுச்செயலாளராக இபிஎஸ் திருமருகலில் அதிமுகவினர் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



நாகப்பட்டினம், ஜூலை.12-
அதிமுக தற்காலிக பொதுச் செயலாளர் அதிமுக பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை வரவேற்கும் விதமாக திருமருகல் எம்ஜிஆர் சிலை அருகே அதிமுக நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஜெயலலிதா பேரவை ஒன்றிய செயலாளர் ராஜேஷ்குமார் தலைமையில் பொதுச்செயலாளர் எடப்பாடியார் வாழ்க என்ற கோஷங்களோடு பட்டாசுகள் வெடித்து, இனிப்புகளை வழங்கி தங்களது கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக திருமருகலில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி பெரிய மணி,ஜெயலலிதா பேரவை மாவட்ட துணை செயலாளர் ரகுபதி, ஒன்றிய பொருளாளர் அருள்மணி, ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் சகாயராஜ்,ஊராட்சி மன்ற தலைவர் தியாகராஜன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மக்கள் குறை தீர்ப்பு முகாம்– பொதுமக்களுக்கு அழைப்பு

மயிலாடுதுறை, ஜூலை- 12;
மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மகாதான தெருவில் உள்ள விமலாம்பிகை திருமண மண்டபத்தில் வருகின்ற 13.07.2022 அன்று காலை 10.00 மணிமுதல் மதியம் 01.00 மணிவரை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை தொடர்பாக மக்கள் குறை தீர்ப்பு முகாம் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா தலைமையில் நடைபெற உள்ளது.

மேலும் குறை தீர்ப்பு முகாமில் மயிலாடுதுறை மாவட்டத்தை சார்ந்த துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்களும் கலந்து கொள்கின்றனர். மயிலாடுதுறை மற்றும் சீர்காழி உட்கோட்ட காவல் நிலையத்தை சார்ந்த பொது மக்கள் தங்களது குறைகள் தொடர்பான மனுக்களுடன் கலந்துகொண்டு பயன் பெற வேண்டுமாய் மாவட்ட காவல்துறை சார்பில் அழைப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# மயிலாடுதுறையில் நடைபெற்ற மூன்று மாவட்ட பள்ளிகளுக்கு இடையிலான செஸ் போட்டி 300–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்பு



மயிலாடுதுறை , ஜூலை12
மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை அடுத்த லட்சுமிபுரத்தில் அமைந்துள்ள தனியார் பள்ளியில், மயிலாடுதுறை, நாகை, காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த மூன்று மாவட்ட பள்ளிகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி நடைபெற்றது.

ஆடவர் மற்றும் மகளிர் என்று தனித்தனியே நடைபெற்ற போட்டியில் ஒன்பதுக்கு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் 9 முதல் 15 வயதுக்குள்ளான சிறுவர் சிறுமியர், 15 வயதிலிருந்து 18 வயதுக்கு உட்பட்ட மாணவ மாணவியர் ஆகிய மூன்று பிரிவுகளில் தனித்தனியே போட்டிகள் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் முதல் 15 இடங்களை பிடிக்கும் மாணவ மாணவிகளுக்கு அடுத்த கட்ட போட்டி சீர்காழியில் நடைபெறும் இதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மாநில அளவிலான போட்டிகளுக்கு தேர்வு செய்யப்படுவதுடன் சான்றிதழும் கோப்பையும் வழங்கப்படுகிறது. இதில் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பதிவு செய்து போட்டிகளில் ஆர்வமுடன் விளையாடினர்.

# புதுக்கோட்டை செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் 11 ஆம் ஆண்டு பட்டயமளிப்பு விழா



புதுக்கோட்டை ஜூலை.12–
புதுக்கோட்டையை அடுத்த லெணாவிலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் 11 ஆம் ஆண்டு பட்டயமளிப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் தலைவர் ஏ.வி. எம்.செல்வராஜ் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.ஜி.செல்வராஜ் விழாவினைத் துவக்கி வைத்து, பட்டயமளிப்பு விழா அறிக்கையை சமர்ப்பித்தார். கல்லூரியின் நிர்வாக இயக்குநர் இரா. வயிரவன் பட்டயம் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். கல்லூரியின் முதன்மை செயல் அலுவலர் ஏ.வி.எம்.எஸ். கார்த்திக் பட்டயம் பெறும் மாணவர்களை வாழ்த்தி வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவிற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கடந்த 2019-2020 ஆம் ஆண்டு அரசு வாரியத் தேர்வுகளை எதிர் கொண்டு சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தால் பட்டயம் பெற்ற 504 மாணவர்களுக்குப் பட்டயங்களை வழங்கி பட்டயமளிப்பு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில் புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் தங்கமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணைத்தலைவர் சோம. நடராஜன், செயலாளர் தே.தியாகராஜன், தாளாளர் ஏ.வி.எம்.ராமையா, செயல் இயக்குநர் மு.பாண்டிகிருஷ்ணன், மனிதவள இயக்குநர் வ.மீனாவயிரவன், திட்டட இயக்குநர் யோகநாதன், இயக்குநர் செயலாக்கம் டி.கணேசன், துணைசெயலாளர் அம்பிகாஇராமையர் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டு பட்டயம் பெற்ற மாணவர்களுக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். கல்லூரி உப தலைவர் சோம. நடராஜன் நன்றியுரை நவில, நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவடைந்தது.

# புதுக்கோட்டையில் புதிய கூட்டுறவு சங்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்



புதுக்கோட்டை ஜூலை.12-

புதுக்கோட்டை மாவட்ட வருவாய்த்துறை ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் என்கிற புதிய கூட்டுறவு சங்கத்தை, புதுக்கோட்டை பிரகதாம்பாள் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள வருவாய்த்துறை அலுவலக கட்டிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு நேற்று துவக்கி வைத்தார்.

மண்டல இணைப்பதிவாளர் மா.உமாமகேஸ்வரி கலந்து கொண்டு கூட்டுறவு சங்க உறுப்பினர் படிவங்களை வழங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி, துணைப்பதிவாளர் அப்துல் சலீம் மற்றும் வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பில் மாநில செயலாளர் தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். சங்கத் தலைவர் இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். நிறைவாக சங்கத் துணைத்தலைவர் லோ.ராஜா நன்றி கூறினார். சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் டிஎன்ஆர்ஏஓ நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை பாஜக அரசு தொடர்பு சார்பில் டிஆர்ஓவிடம் 6 மனுக்கள் கொடுக்கப்பட்டது



புதுக்கோட்டை ஜூலை.12-

தமிழக அரசையும் மாவட்ட நிர்வாகத்தையும் வலியுறுத்தி புதுக்கோட்டை பாரதிய ஜனதா கட்சி அரசு தொடர்பு சார்பில் டிஆர்ஓவிடம் 6 மனுக்கள் கொடுக்கப்பட்டது.

நேற்று நடைப்பெற்ற மக்கள் குறைத்தீர் நாள் கூட்டத்தில் அரசு தொடர்பு மாவட்ட தலைவர் சீனிவாசன் தலைமையிலான நிர்வாகிகள் கோவிந்தசாமி, செல்லத்துரை, பாலு, வடிவேல், ரங்கசாமி உள்ளிட்டோர் புதுக்கோட்டை நகரத்தில் இயங்கி வரும் அரசு மதுபான கடைகள் அனைத்தையும் நகரத்தை விட்டு வெளியே கொண்டு செல்லவும். புதுக்கோட்டை நகரத்தில் இயங்கி வந்த அரசு மருத்துவமனையை மீண்டும் புதுக்கோட்டை நகரத்திற்கு மாற்றித்தர வலியுறுத்தியும்.

ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். அரசு பள்ளிகளில் திறக்கப்பட்ட இரண்டு மாதங்களாகியும் மாணவர்களுக்கு கொடுக்க வேண்டிய புத்தகம் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன நோட் உள்ளிட்ட உபகரனங்கள் வழங்க வேண்டியும். அரசுப் பள்ளிகளில் தகுந்த இடம் இல்லாமல் கட்டிடம் இல்லாமல் மாணவ மாணவர்கள் மரத்தடியில் வகுப்பு எடுக்கும் சூழல் உள்ளதால் புதிய கட்டிடங்கள் கட்டித் தர வேண்டும்.

அரசினர் பள்ளி, கல்லூரிகள், மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி, அரசு சம்பந்தமான எந்த சுற்று சுவர்கள் மீதும் விளம்பரம் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தும் விதமாக மாவட்ட வருவாய் அலுவலர் செல்வியிடம் மனு அளிக்கப்பட்டது.

# அதிமுக பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு உளுந்தூர்பேட்டையில் வழக்கறிஞர்கள் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



கள்ளக்குறிச்சி ஜூலை.12-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நீதிமன்ற வளாகத்தில், வழக்கறிஞர் திலிப் தலைமையில், உளுந்தூர்பேட்டை பகுதியை சேர்ந்த அதிமுக வழக்கறிஞர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இடைக்கால பொதுச்செயலாளராக சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தங்களது மகிழ்ச்சியை தெரிவிக்கும் வகையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் வேதகிரி, கிருஷ்ணன், சிவா, தேவராஜ், ஆறுமுகம், பன்னீர், தனசேகர், லோகநாதன், ஞானமூர்த்தி, செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மீமிசல் நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில்

# லீடு வகுப்பறைகள் திறப்பு விழா மற்றும் வில்வித்தை பயிற்சி துவக்க விழா



ஆவுடையார் கோவில் ஜூலை.12-

அறந்தாங்கி அருகே மீமிசலில் நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் லீடு வகுப்பறைகள் திறப்பு விழா மற்றும் வில்வித்தை பயிற்சியை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் துவக்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, மீமிசல் நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் லீடு வகுப்பறைகள் மற்றும் வில்வித்தை பயிற்சி வகுப்புகளை பள்ளியின் தாளாளர் ராமசாமி தலைமையில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் மற்றும் ஆவுடையார்கோவில் துணை சேர்மன் பிரியா குப்புராஜா, மீமிசல் ஊராட்சி மன்ற தலைவர் செல்வம், ஒன்றிய கவுன்சிலர் ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியில் சிறப்பித்தனர்.

இதில் கம்ப்யூட்டர் வகுப்பறைகளையும் வில்வித்தை பயிற்சி வகுப்புகளையும் துவக்கி வைத்து சட்டமன்ற உறுப்பினர் உரையாற்றினார். நிகழ்ச்சியில் இந்தக் கல்வியாண்டில் பன்னிரண்டாம் வகுப்பில் 500-க்கும் மேல் மதிப்பெண் பெற்றவர்களுக்கும் பத்தாம் வகுப்பில் 400-க்கும் மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.








மதுரையில், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட இஸ்லாமிய பிரச்சார பேரவை சார்பாக பக்ரீத் பெருநாளையொட்டி திடல் தொழுகை நடைபெற்றது. இதில் தமுமுக மாநில செயலாளர் சிவகாசி முஸ்தபா பெருநாள் உரை நிகழ்த்தினார். இதில் மமக மாநில பொதுச் செயலாளர் முகமது கவுஸ் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சி தமுமுக மற்றும் மமக மதுரை தெற்கு மாவட்ட தலைவர் சேக் இப்ராஹிம் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்ச்சியில், மமக மாவட்ட செயலாளர் முபாரக் நிஜாமுதீன், தமுமுக மற்றும் மமக மாவட்ட பொருளாளர் அப்துல் ஹமீது, தமுமுக மாவட்ட ஊடகப் பிரிவு செயலாளர் அப்துல் பாரிக், சமூக நீதி மாணவர் இயக்க மாவட்ட செயலாளர் பக்ருதீன், கிளை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என 500-க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

## கள்ளக்குறிச்சியில் டிஜிட்டல் எக்ஸ்ரே பொருத்திய வாகனத்தினை

# மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்



கள்ளக்குறிச்சி ஜூலை.12-

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் காசநோய் கண்டறியும் டிஜிட்டல் எக்ஸ்ரே பொருத்திய வாகனத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்ரீதர் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழக அரசு தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் 2025-ல் காசநோய் இல்லா தமிழகம் என்ற இலக்கினை அடையும் பொருட்டு, காசநோய் கண்டறியும் டிஜிட்டல் எக்ஸ்ரே பொருத்திய நவீன மருத்துவ வாகனத்தினை சென்னையில் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து, தமிழக அரசால் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட காசநோய் கண்டறியும் நடமாடும் வாகனத்தினை பார்வையிட்டு நேற்று கள்ளக்குறிச்சி மாவட்ட மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்காசநோய் கண்டறியும் வாகனம் மருத்துவ குழுவினருடன் கிராமங்கள் முழுவதும் சென்று, காசநோய் கண்டறிதல், சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள், வயதானவர்கள், புகைப்பிடிப்பவர்கள், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், சிறுநீரகம் தொடர்பான நோய் உடையவர்கள், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனை செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உள்ளனர். இதனை கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது, இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் பாலச்சந்தர், துணை இயக்குநர் (காசநோய்) சுதாகர், துணை இயக்குநர் பொது சுகாதாரம் ராஜா, நெஞ்சக நோய் நிபுணர் ராம்குமார், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவக் கண்காணிப்பாளர் நேரு, துணை மருத்துவக் கண்காணிப்பாளர் பழமலை, உதவி மருத்துவ அலுவலர் பொய்யாமொழி, தேசிய சுகாதார குழுமத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மேல்மருவத்தூர் அருகே அதிமுக பொதுக்குழுவிற்கு சென்ற வேன் விபத்துக்குள்ளானதில் 15 பேர் படுகாயம்

மேல்மருவத்தூர் ஜூலை.12-

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அருகே உள்ள உளுந்தை கிராமத்தைச் சேர்ந்த 15-க்கும் மேற்பட்டோர் வேன் ஒன்றில் நேற்று காலை 5 மணிக்கு புறப்பட்டு சென்னையில் நடைபெறும் அதிமுக பொதுக்குழுவில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்தனர். இந்த வேன் செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் அருகே இரட்டை ஏரிக்கரை என்ற இடத்தில் செல்லும் பொழுது எதிர் சாலையான சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி சென்ற லாரி சாலை நடுவே உள்ள தடுப்பு சுவரில் ஏறி எதிரே வந்த ஆம்னி பஸ் மீது மோதியது. இதனை தொடர்ந்து லாரி, ஆம்னி பஸ் இணைந்து அதிமுக பொதுக்குழுவில் கலந்து கொள்வதற்காக சென்ற வேன் மீது மோதியது.

இந்த விபத்தில் லாரியின் டிரைவர், உடன் இருந்த 2 பேர் மற்றும் ஆம்னி பஸ்சில் பயணம் செய்த 4 பேர் மற்றும் சென்னை வானகத்தில் நடைபெறும் அதிமுக பொது குழுவில் கலந்து கொள்ள வேனில் சென்ற அதிமுக கட்சியினர் 10-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த விபத்து குறித்த தகவல் அறிந்ததும் மேல்மருவத்தூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விபத்தில் காயம் அடைந்தவர்களை மீட்டு மேல்மருவத்தூர் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



புதுக்கோட்டை பழைய அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் உலக மக்கள் தொகை நாளினை முன்னிட்டு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று, தேசிய காச நோய் ஒழிப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வு வாகனத்தினை துவங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, இணை இயக்குநர் ஊரக நலப்பணிகள் ராமு, புதுக்கோட்டை நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில், நகர் மன்ற துணைத் தலைவர் லியாகத் அலி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# அதிமுக தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேரும் நேரம் வந்து விட்டதாக சசிகலா பேச்சு



சென்னை ஜூலை.12-

அதிமுக தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேரும் நேரம் வந்து விட்டது என்று சசிகலா கூறினார்.

அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் சென்னை வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் அதிமுக இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். அ.தி.மு.க செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட 16 தீர்மானங்கள் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது. இதற்கிடையில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் நேற்று காலை எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர் செல்வம் ஆதரவாளர்கள் மோதிக்கொண்டனர். இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ஈபிஎஸ் - ஓபிஎஸ் ஆதரவாளர்கள் மோதிக்கொண்டதில் பலருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அதிமுக தலைமை கழக அலுவலகம் அமைந்துள்ள பகுதி முழுவதும் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அதிமுகவில் நிலவி வரும் சூழல் குறித்து நிகழ்ச்சி ஒன்றில் சசிகலா பேசியதாவது, இன்றைய (நேற்று) நிகழ்வுகளை பார்க்கும்போது அதிமுக தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேரும் நேரம் வந்து விட்டது. தலைமை பதவியை அடித்து பிடிக்க நினைத்தால் அது நிலைக்காது. பணம் அதிகாரம் வைத்து அடைந்த எந்த பதவியும் நிலைக்காது. சட்டப்படி செல்லாது. நிழலுக்காக சண்டையிட்டு நிஜத்தை இழந்துவிடக் கூடாது. ஒட்டுமொத்த தொண்டர்களின் ஆதரவோடு நிஜத்தை நிச்சயம் அடைவோம். ஒன்றரை கோடி தொண்டர்களும், பொதுமக்களும் என்னை தான் ஆதரிக்கிறார்கள். பொதுக்குழுவில் நிதிநிலை அறிக்கைகளை பொருளாளரே அறிவிக்க முடியும். அப்படி இருக்கையில் இது எப்படி பொதுக்குழுவாக ஏற்றுக்கொள்ள முடியும். அதிமுக பொதுக்குழு நடந்ததே செல்லாது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஆலங்குடி அருகே தேசிய அளவிலான வாலிபால் போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசளிப்பு விழா



ஆலங்குடி ஜூலை.12-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே உள்ள வடகாட்டில் அண்ணா கைப்பந்து கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு தேசிய அளவிலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வாலிபால் போட்டிகள் கடந்த 3 நாட்களாக நடைபெற்றது.

8 தேதி இரவு முதல் மூன்று நாட் கள் நடைபெற்ற தேசிய அளவிலான வாலிபால் போட்டியை மாநில விளையாட்டு துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

ஆண்கள் பிரிவில் கேரளா காவல் துறை, சென்னை எஸ்ஆர்எம், சென்னை ஜிஎஸ்டி, பெங்களூர் அணி ஆகிய அணிகள் கலந்து கொண் டன. பெண்கள் பிரிவில் கேரளா கேஎஸ்இபி அணி, கேரளா காவல் துறை, சென்னை எஸ்ஆர்எம், சென்னை ஐசிஎப் ஆகிய அணிகள் கலந்து கொண்டன.

வடகாட்டில் நடைபெற்ற வாலிபால் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் பரிசாக ஆவடை ரெங்கன் நினைவு கோப்பை மற்றும் ரூ.1,00,000 ஜிஎஸ்டி சென்னை அணியினருக்கு வழங்கப்பட்டது.

இரண்டாவது பரிசாக ரூ.77,777 எஸ்ஆர்எம் சென்னைக்கும் மூன்றாம் பரிசாக ரூ.70,000 ஆயிரம் கர்நாடகாவிற்கும் நான்காம் பரிசாக ரூ.60,000 ஆயிரம் கேரளா போலீஸ் அணிக்கும் வழங்கப்பட்டது.

இதேபோல் பெண்கள் பிரிவில் கேரளா கேஎஸ்இபி-க்கு முதல் பரிசாக ரூ.50 ஆயிரமும் இரண்டாவது பரிசாக ஐசி எஃப் சென்னைக்கு ரூ.40 ஆயிரமும் மூன்றாவது பரிசாக கேரளா போலீஸ் அணிக்கு ரூ.30,000 ஆயிரமும் நான்காவது பரிசாக எஸ்ஆர்எம் சென்னைக்கு 25,000 ஆயிரமும் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியில் தடகளம் குறித்த சிறப்பு விரிவுரை நிகழ்ச்சி



புதுக்கோட்டை ஜூலை.12-

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின், உடற்கல்வித்துறை சார்பாக தடகளம் குறித்த சிறப்பு விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட தடகள சிறப்பு பயிற்சியாளர் செந்தில் கணேஷன் கலந்து கொண்டு தடகளத்தில் உள்ள சமீபத்திய மாற்றங்கள் குறித்து சிறப்பாக விளக்கினார்.

அவர் தம் உரையில், சர்வதேச அளவிலான விதிமுறைகளை பற்றி விளக்கினார். அதேபோல் தற்போது தடகளத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்னவென்று மிக தெளிவாக விளக்கினார். மேலும் மாணவர்கள் தங்களுக்குள்ள சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

தடகள வீரரை எவ்வாறு உருவாக்க வேண்டும், இளமையில் வீரர்களை எவ்வாறு கண்டறிய வேண்டும் விளையாட்டு வீரர்கள் உணவு எவ்வாறு எடுத்துக் கொள்ள வேண்டும். அதேபோல் சமீபத்திய பயிற்சி உபகரணங்கள் எவ்வாறு உள்ளன அதன் பயன்கள் என்ன என்பதனையும் கூறினார். நீண்ட நெடிய பயிற்சியே சிறந்த தடகள வீரரை உருவாக்கும் என்று கூறினார். மேலும் சர்வதேச தடகள வீரர்களின் பயிற்சி முறைகளையும் சாதனைகளையும் குறிப்பிட்டார்.

உடற்கல்வித்துறை தலைவர் ஜெகதீஷ்பாபு தடகளம் குறித்த சிறப்பு விரிவுரையை தொடங்கி வைத்தார். மாணவி பாண்டிசெந்திகா, (மூன்றாம் ஆண்டு) வரவேற்பு உரை வழங்கினார். கேத்தரின் ஜாய் செல்வகுமாரி தடகளம் குறித்து சிறப்பு விரிவுரையை அமைத்துக் கொடுத்தார். மாணவி விஷாலினி (மூன்றாம் ஆண்டு) நன்றியுரை வழங்கினார்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அதிமுகவிலிருந்து ஓபிஎஸ் நீக்கம் ஈபிஎஸ்ஐயும் நீக்கி ஓபிஎஸ் அதிரடி

# விஜய்மல்லையாவுக்கு 2000 ரூபாய் அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு





# நிழலை நம்பி நிஜத்தை இழக்கிறார்கள் சிசிகலா


சென்னை / புதுக்கோட்டை | 12.07.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**குஞ்சிதம் குருசாமி** , திராவிட இயக்கத்தில் ஈடுபட்ட ஒரு பெண் செயற்பாட்டாளர் (பி.1909) (இ.1961)



**மு. அனந்தகிருஷ்ணன்** , தமிழ் இணையக் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (பி.1928)



**சுந்தர் பிச்சை** , இந்திய-அமெரிக்க கணினி தொழில்நுட்ப மேலாளர் (பி.1972)



**நா. முத்துக்குமார்** , தமிழகத் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் (பி.1975) (இ.2016)



## இன்றைய நினைவு நாள்

**உமர் தம்பி** , தமிழ் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (பி.1953) (இ.2006)



**தாரா சிங்** , இந்திய மற்போர் வீரர், நடிகர் (பி.1928) (இ.2012)



**மணி கிருஷ்ணசுவாமி** , தமிழக கருநாடக வாய்ப்பாட்டு கலைஞர் (பி.1930) (இ.2012)

